பேருந்துகளை இயக்குவதில் கடினமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் இதுபோன்று நீட்டிப்புகள் எங்களால் இயலவில்லை என்பதைக் குறிப்பிட்டேன்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தூரத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அடையாறிலிருந்து திருப்போரூர் வரை இயக்கினால் 27 கிலோமீட்டர் தூரம் இருக்கும். அது பல்லவன் போக்குவரத்துக் கழக விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கும் என்பதினாலே மீண்டும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று கேட்கின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னைப் பெருநகரத்திற்கு மட்டும்தான் பல்லவன் போக்குவரத்துக் கழகம், அம்பேத்கார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக இருந்தாலும் கூட அந்த விதிகளைத் தளர்த்தி அந்தப் பகுதியிலே நாங்கள் பேருந்துகளை 39 கிலோமீட்டர் இயக்கிக் கொணடிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அதை டாக்டர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக அந்தப் பகுதியிலே பேருந்துகள்—நகரப் பேருந்துகள்- இயக்குகின்ற காரணத்தினாலே அது தேவைய்இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

47—

கொடுமுடியாறு அணை கட்டுமானப் பணியின் நிலை

*24532—**திருமதி ரமணி நல்லதம்பி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கொடுமுடியாறு அணை கட்டுமானப் பணியின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் 16 கோடியே 24 இலட்சம்

TRUTH ALONE TRIUMPHS

1995 மார்ச் 17]

செலவில் அரசு ஒப்புதல் அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.. இதற்கென்று ஒரு தனிக்கோட்டம், 1-9-1993 அன்று வள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

திட்ட முன்னேற்பாட்டுப் பணிகளான நில ஆர்ஜிதம், மாதிரி துளைகள் இடுதல், மதிப்பீடு தயாரித்தல், வடிவமைப்பு, குடியிருப்புகள், அணுகுசாலை ஆகிய வேலைகள் நடைபெற்று வருகின்றன. திட்டப்பணிகளில் ஒன்றான தற்போது உள்ள 3 கால்வாய்களையும் சீரமைக்கும் பணிகள், ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. நில ஆர்ஜிதப் பணிகளுக்கு என சிறப்பு தாசில்தார் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டம், தற்போது நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்பு திட்டத்தின் (W.R.C.P.) கீழ் செயல்பட உள்ளதால் உலக வங்கியின் விதிமுறைகளுக்கு ஏற்ப ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. அணை அமைக்கும் பணிகள் விரைவில் துவக்கப்படும்.

முற்பகல் 10-35

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொடுமுடி அணையானது, 1964, 1974, 1984 இப்படிப் பல்வேறு காலகட்டங்களில் நிதி ஒதுக்கப்பட்டு, அமைச்சர் அவர்களால் குறிப்பிடப்பட்ட லிங்க் ரோடு, குவாட்டர்ஸ், ஸ்டோர் ரூம் இப்படிப்பட்ட பணிகளைச் செய்து, கைவிடப்பட்ட நிலையில், இந்த அரசு அதனை மேற்கொண்டு, இன்றைக்கு அதிக நிதியும், ஒதுக்கி வேலைகள் நடந்து கொண்டிருப்பதை அறிந்து நான் சந்தோஷப்படுகிறேன். அதே வேளையில், நீர்ப்பிடிப்பு ஏரியாவை வாட்டர் கேட்ச்மென்ட் ஏரியாவை—ஆர்ஜிதம் செய்யாமல், இந்த அணை பணியைத் தொடங்கினோம் என்றால், திரும்பவும் முதலீடு போட்டு—ஏற்கெனவே ஏகப்பட்ட முதலீடு அதிலே போட்டுவிட்டோம்—அந்த அணையைக் கட்டி முடிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ என்கிற அந்த பயத்தினால்தான், நில ஆர்ஜிதம் எல்லாம் முடிந்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதப் பணியைப் பொறுத்தமட்டிலும், ஏரிகள் சீரமைக்கும் பணி மற்றும் இதர பணிகள் முடிவுற்றாலும்கூட, சில பணிகள் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால், ஆர்ஜிதத்தைப்

பொறுத்தவரையில் கொஞ்சம் தாமதப்பட்டு வருகிறது. அதிலே, 113.68 ஹெக்டேர் பட்டா நிலங்களும், 49.66 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களும், 13.06 ஹெக்டேர் வன நிலங்களும் நாம் கையகப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். சில நிலங்களையும் ஆர்ஜிதப் படுத்துவதற்காக 4(1) நோட்டீஸை வெளியிடுவதற்காக அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வன நிலங்களைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. இதற்கு ஈடாக வனத்துறைக்கு அளிக்க வேண்டிய நிலங்களையும் நாம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பல சூழ்நிலைகள் இருக்கிற காரணத்தினால், இந்த அணைகள் கட்டும் பணி, கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருந்தாலும்கூட, இதனை முழுமையாக முடிக்க வேண்டுமென்று, நில ஆர்ஜிதத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை, அவசரச் சட்டத்தின்மூலம் எடுக்கலாமென்றும் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அவசரச் சட்டத்தின்மூலம் ஆர்ஜிதம் செய்தாவது நிச்சயமாக அந்த அணையைக் கட்டி முடிப்போமென்ற உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய உத்திரவாதத்திற்கு நன்றி. இந்த அணையை எப்படியாவது இந்த அரசு முடித்துத் தருமென்ற நம்பிக்கையை நீங்கள் ஏற்படுத்துகிற வகையிலே உங்களுடைய பதிலை அளித்ததற்கு நன்றிகூறி, முடித்துத் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

48—

திருவட்டார் தொகுதியில் மின் அழுத்தக் குறைவைச் சரிசெய்தல்.

*24656—**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவட்டார் தொகுதி, வேர்கிளம்பி பேரூராட்சி, ஒட்டலிவிளை ஆதிதிராவிடர் காலனியில் உள்ள மின் அழுத்தக் குறைவினைச் சரி செய்ய, அங்கு ஒரு மின் மாற்றி அமைக்க அரசு முன்வருமா ?